பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 27 புதன்கிழமை 12.07.2023 கதிர் 243

## குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரம் உண்மை அறியும் ஆணைக்குழுவிற்குத் தேவை

### யஸ்மின் சூக்கா வலியுறுத்து

தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இலங்கை உருவாக்கிவரும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மூலம் குற்றவாளிக் மீது குற்றவியல்வழக்குகளைத் தாக்கல் செய்யப்படுவதில் இலங்கை ஆட்சியாளர்கள் உறுதியாகயிருக்கவேண்டும்என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேசத்திட்டம் என்ற அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் நடந்த இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர்கள் குழுவின் உறுப்பினராகவும் இருந்தவரான சூக்காவுக்கு இலங்கையின் போர்ப் பின்னணி குறித்த ஆழமான அறிதல் இருக்கின்றது.

அதனடிப்படையிலேயே அவர், உண்மை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மூலம் குற்றவியல் வழக்குகள் இடம்பெறவேண்டும் என்பதில் இலங்கை ஆட்சியாளர்கள் உறுதியாக இருக்கவேண்டும் என்று வலியுறுத் தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குற்றவியல் வழக்குகளைத் தவிர்த்தல் சர்வதேச நியமங்கள் மற்றும் தராதரங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகத்தின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

ஆவணங்களை அழிப்பதை தவிர்த்தல் தொடர்பில் பாதுகாப்பு படையினர் உரிய அமைப்புகள் திணைக்களங்களுக்கு உத்தரவொன்றை பிறப்பிக்கவேண்டும் – ஆவணங்களை அழிப்பதை குற்றமாக அறிவிக்கவேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் முன்வைக்கப்படும் ஆதாரங்களை எதிர்கால வழக்குகளை நோக்கமாக கொண்டு சேகரிக்கவேண்டும். பிந்தைய கட்டத்தில் அவை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் – என்றார்.

## இது ரகசியம் அல்ல!

கட்சித் தலைவர்கள் நீண்ட காலமாகப் பதவியில் தொடர்வது மற்றும் அடுத்தவர்கள் பதவிக்கு வர அனுமதி மறுப்பது தொடர்பில் நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன். அதில் தமிழ் அரசுக் கட்சியைத் தவிர்த்து ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்திலும் இந்த நிலை நீடிப்பதைச் சுட்டிக்காட்டியிருந்தேன். அந்தக் கட்சிகளில் எல்லாம் இரண்டாம் மட்டத் தலை வர்களேகூட இல்லை என்பதையும், அப்படி எவரும் முளைத்துவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்கிறார்கள் என் றும் சுட்டிக்காட்டியிருந்தேன். அப்படி ஒப்பிடும்போது தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எவ்வளவோ மேலானவர் என்று அந்தக் கட்சியின் முக்கிய நபர் ஒருவர் தெரிவித்த கருத்தையும் தெரிவித்திருந்தேன்.

அதற்குப் பலத்த எதிர்வினையாற்றப்பட்டிருக்கின்றது. முதலில் இந்தத் தமிழ்க் கட்சிகளின் பட்டியலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியை நான் தவறவிட்டது குறித்து எனக்குப் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்சியும் இந்த நீண்டகாலத் தலைமைப் பதவியில் முன்னாள் இயக்கங்களுக்குச் சளைத்ததில்லை என்றபோதும் நான் வேண்டுமென்றே அதைத் தவறவிட்டேன் என்று வசை பாடியிருந்தார்கள்.

உண்மை அதுவல்ல. தமிழ்க் ☞2

### சரத் வீரசேகரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# வட - கிழக்கு சட்டத்தரணிகள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பு

### கண்டன ஆர்ப்பாட்டமும் நடந்தினர்





ராஜபக்சக்கள் தலைமையிலான பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதித்துறையின் சுதந்திரத்தை - சுயாதீனத்தை - அச்சுறுத்தும் வகையில் முல்லைத்தீவு நீதிவானுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையைக் கணடித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்கு கிழக்கில் நேற்று சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் கவனவீர்ப்புப் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.

வடக்கில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, மன்னார், வவுனியா நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் இன்று தமது கடமைகளில் இருந்து ☞2

## இந்திய அயலுறவுச் செயலர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோஹன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொண்டு, இரு நாட்டு மக்களுக்கும் பலனளிக்கும் வகையில் சமூக மற்றும் பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக அரசு முன்னெடுத்துவரும் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் இந்திய வெளியுறவுச் செயலாளருக்குத் ☞2

## நீதித்துறையின் மீது வெட்கக்கேடான தாக்குதலே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் உரை

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

குருந்தூர் மலையில் தனனைச்சமர்ப்பணம்செய்ய அனுமதிக்காத முல்லைத்தீவு நீதிவான்டி.சரவணராஜாவுக்கு எதிராபொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஜூலை 7 நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை, நாட்டின் நீதித்துறை மற்றும் சமூகக் கட்டமைப்பின் மீதான அடிப்படையற்ற, வெட்கக்கேடான தாக்குதல் என்று வன்மையாகக் கண்டித்துள்ளது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்.

இது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது. அதில், நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ள விடயங்கள் குறித்து நாடாளுமன்றத்தில்உரையாற்றுவதன்மூலம்நாடாளுமன்ற சிறப்புரிமையைத் தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது என்றும் கண்டித்துள்ளது சங்கம்.

2023ஆம் ஆண்டு ஜூலை 07 நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் ஆற்றிய வரை நாட்டின் நீதித்துறை மற்றும் சமூக கட்டமைப்பின் மீது நடத்தப்பட்ட அடிப்படையற்ற, வெட்கக்கேடான தாக்குதல்..

நீதித்துறைக்கு அழுத்தம் கொடுக்கும் சமீபத்திய இந்தப் போக்கு இந்த நீதித்துறையின் முக்கியமான அடிப்படைகளை அச்சுறுத்துவதுடன் குறைமதிப்பிற்கும் உட்படுத்துகின்றது.

ஒரு துடிப்பான ஜனநாயகம் நிலவுவதற்கு, வெளிப்புற அழுத்தங்கள், ☞2

## மக்களின் ஆணையை பெற்றவர்கள் அதற்கு மாறாகச் செயற்படமுடியாது

### மோடிக்கான கடிதம் குறித்து சம்பந்தர் திட்டவட்டம்

ந.லோகதயாளன்.

மக்கள்ஆணையைபெறாதவர்கள் எதனை வேண்டுமானாலும் கோரலாம் மக்கள் ஆணையைப் பெற்றநாம் அதற்கு மாறாக செயல்பட முடியாது என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தியப்பிரதமர்நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக ஜனநாயகக் கூட்டணி தயார் செய்த கடிதத்தில் ஒப்பமிட மறுத்துவிட்டது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி இந்தியாபயணிப்பதையொட்டி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனநாயகக் தமிழ்த் தேசியக் கூட்டணி கடிதம் ஒன்றை அனுப்பத் திட்டமிட்டது. அதற்கமைய ஒரு கடிதம் தயாரிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் தமிழ்த் தேசியக்கட்சிகள் அனைத்தும் ஒன்றாகக் கையெழுத்திடும் பொருட்டு அதில் தமிழ் அரசுக் கட்சிப் பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் ஒப்பத்தையும்பெறஜனநாயகக்கூட்டணி நடவடிக்கை எடுத்தது.

பிரதமர் மோடிக்கு அனுப்பப்படவுள்ள கடிதத்தின் பிரதி சம்பந்தரிடம் கையளிக்கப்பட்டது. அதில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது தொடர்பில் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று சாரப்பட மட்டுமே லலியுறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்து அதில்கையெழுத்திடசம்பந்தர் மறுத்துவிட்டார். அதற்குப் பதிலாக அனுப்பப்படக்கூடிய கடிதம் ஒன்றையும் தயாரித்து ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுக்கு சம்பந்தன் அனுப்பியிருந்தார். ஆனால், அதனை ஏற்க அவர்கள் மறுத்திவிட்டனர்.

இந்த நிலையிலேயே, மக்கள்ஆணைபெற்றதம்மால் அதற்கு மாறாகச் செயற்படமுடியாதுஎன்றுஇரா.சம்பந்தன் காலைக்கதிர் பத்திரிகையிடம் தெரிவித்தார். ☞2

## இந்தியத் தூதர் இன்று சம்பந்தனுடன் பேச்சு

ந.லோகதயாளன்.

இரா.சம்பந்தன்தலைமையிலான அணியினரை இந்தியத் தூதுவர் இன்று கொழும்பில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர்கோபால்பாக்லே உள்ளிட்ட குழுவினர் இன்று காலை11மணிக்குகொழும்பில் உள்ள சம்பந்தரின் இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேசுகின்றனர்..

அடுத்தவாரம் இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை 22 பிரதமர் மேரடியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளைக் கவனிக்கவென இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் செயலாளர் இரு நாள் பயணமாகக் கொழும்பு வந்து திரும்பியிருக்கிறார்.

அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களைச் சந்தித்து மோடியுடனமான சந்திப்புக் குறித்த ஏற்பாடுகளைக் கவனித்தார். இந்த நிலையிலேயே இந்தியத் தூதுவர் இன்று அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம்குறித்தும், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும், தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதியிடம் இந்தியா வலியுறுத்தவேண்டிய ☞2

## இனி இது .....

காங்கிரஸ் என்பது நிறுவனமயப்பட்ட ஒரு குடும்பச் சொத்து என்பது தமிழர்கள் எல்லோருக்கும் தெரியும். மூன்று தலைமுறைகளாகப் பொன்னம்பலம் குடும்பம் மட்டுமே அதன் தலைமைப் பதவியைப் பரம்பரை பரம்பரையாகக்கொண்டிருக்கின்றது, வாரிசு அரசியலின் உச்சம் அது என்பது எல்லாம் எல்லோருக்கும் தெரியும். அது குறித்த அவர்களும் வெட்கப்பட்டதில்லை, அந்தக் கட்சியில் உள்ளவர்களும் அதற்கு அடிமைப்பட்டு நடப்பதற்குத்தயாராகமட்டுமே இருக்கிறார்கள் என்பதும் பரகசியமான உண்மை. அந்த அடிப்படையில் அந்தக் கட்சியை இந்தப் பட்டியலிற்குள்கொண்டுவரவில்லையே தவிர, அதனைத் தவிர்ப்பது எனது நோக்கமாக இருக்கவில்லை.

காங்கிரஸ் பொன்னம்பலம் குடும்பதின் சொத்து என்பது போலல்ல மற்றைய கட்சிகளின் நிலை. அவை தம்மை ஏதோ ஜனநாயகப் பாரம்பரியத்தில் திளைத்த கட்சிகள் என்றே வெளியே காட்டிக்கொள்கின்றன. கொழும்புடனான கருத்து மோதல்களின் போதெல்லாம் ஜனநாயகத்தின் காவலர்களாகத் தம்மைவரிந்துகொள்கின்றன. அப்படியிருக்கும்போது, அங்கு உட்கட்சிஜனநாயகம்இல்லை என்பதையும் ஒருவரே தொடர்ந்து நீண்ட காலம் தலைவராகத் தொடர்வதன் மூலம் அந்தக் கட்சிகள் புத்துணர்ச்சியடையமல், குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டிக்கொண்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டுவதே எனது நோக்கமாக இருந்தது.

அப்படியிருந்தும் தமிழ் அரசுக் கட்சி விடயத்தில் வாசகர் ஒருவர் முழங்கித் தள்ளியிருக்கும் விடயங்களை அப்படியே இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

தங்களது இன்றைய (நேற்று) இடிமின்னல் பத்தியில் தமிழ் அரசுக் கட்சியின் பிரமுகர் ஒருவர் கூறிய சில விடயங்களை வெளிப்படுத்தி இருந்தீர்கள். அவரின் கருத்துக்கள் ஏற்புடையதல்ல. பாரம்பரியமான தமிழ் அரசுக் கட்சியினை, அரசியல் கட்சிகளாக தற்போது தங்களை மாற்றிக் கொண்டுள்ள முன்னால் போராட்டக்குழுக்களுடன் ஒப்பிடுவது தவறு.

தவறுகளைச் சுட்டிக் காட்டினால் குத்தி முறிய வேண்டாம் என்று கத்திக் குளறும் செல்வம் ஆகட்டும் புலிகள் ஒழிந்தார்கள் என்று 2009இல் குதூகலித்த சித்தார்தன் ஆகட்டும் அந்நாளிலும், இந்நாளிலும் ஜனநாயகமரபுகளைபெரிதும் பொருட்படுத்தியதில்லை. இவர்கள் இரண்டாம் நிலை தலைவர்களை உருவாக்க விடமாட்டார்கள். ஏனென்றால் இது இவர்களின் ஆயுத பின்புலத்தினால் வந்த வெளிப்பாடு.

ஆனால் தொடர்ந்து ஜனநாயக மரபுகளை பின்பற்றி வரும் தமிழ் அரசுக் கட்சியில் இவ்வாறு நிகழ்வது ஏற்றுக்கொள்ள முடியாதது. இரண்டுதவறுகள் ஒரு சரியாக முடியாது. (Two wrongs do not make a right).

இவர் கூறுவது போல் மாவையர் 2ஆம் நிலைத் தலைவர்களை வெட்டித்தள்ளாமல் பெருந்தன்மையாக நடக்கிறார் என்பது நகைப்பிற்குரியது. தமிழ் அரசு கட்சியில் ஆளுமை உள்ள இரண்டாம் நிலைத் தலைவர்கள் பலர் இருக்கிறார்கள், என்னதான் உள்குத்துகள் இருந்தாலும். இவர்களை ஒரேயடியாக வெட்டித்தள்ள மாவையர் ஒன்றும் கருணாநிதியோ ஜெயலலிதாவோ போல் ஆளுமை உள்ளவர் அல்லர்.

மாவை 2020 தேர்தல் தோல்வியின் பின்னர் கட்சியின் தேர்தல் சரிவிற்குத் தார்மீகப் பொறுப்பேற்று விலகி கட்சியினை மறுசீரமைக்க வழி வகுத்து இருக்க வேண்டும். புதிய படித்த இளைஞர், யுவதிகளை உள்வாங்கிபொறுப்புகளைவழங்கி கட்சிக்கு புதுப் பொலிவு அளித்திருக்கவேண்டும். மாறாக கட்சி மகாநாட்டை இழுத்தடித்து ஆயுள் தலைவராகநிலைக்கநினைப்பதன் மூலம்வரும்தேர்தல்களிலும் தமிழ் அரசுக்கட்சிக்கு பெருந்தோல்வியைப் பெற்றுக் கொடுத்த தலைவர் என்ற பெருமையும், வடக்குகிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு தகுதியான பிரதிநிகள் கிடைக்க விடாமல் பண்ணிய புண்ணியவான் என்ற பெருமையையும் தட்டிச் செல்வார் என்பது நிச்சயம்.

விளைவாக, சில புலம் பெயர் அமைப்புக்களின் தூண்டுதலால் எல்லாவற்றையும் குழம்பி அடிக்கும் கஜேந்திரகுமார், செயல் திறனற்ற வெற்று அறிக்கை வீரன் விக்னேஸ்வரன் மற்றும் பிள்ளையான் போன்ற இரத்தக்கறைபடிந்தவர்களும் ஊழல்வாதிகளுமே தமிழர் பிரதிநிதிகளாக அதிகம் தேர்வு செய்ய படுவார்கள். ஒன்றை மட்டும் அந்த தமிழரசு பிரமுகர் அறிந்து கொள்ள வேண்டும். தனது சுயநலப் புத்தியினாலும் பதவி வெறியானாலும் மாவை தமிழ் அரசு கட்சியினை முழு அழிவுக்கு (Total destruction) இட்டுச் செல்கிறது தெளிவாக தெரிகிறது.

இப்படி அந்த வாசகர் பொரிந்துதள்ளியிருக்கிறார். இவையெல்லாம் அப்படியே அவரது கருத்துக்கள், அவரது வசனங்களிலேயே தரப்பட்டிருக்கின்றன. உண்மை என்ன என்பதைச் சீர் தூக்கி ஆராய்ந்து கட்சிகளிடமும் அவற்றின் தலைமையிடமும் சட்டையைப் பிடித்துக் கேள்வியை எழுப்ப வேண்டியதுஉங்கள்கடமை வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)ம

## வட - கிழக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகியிருந்தனர். இன்றைய வழக்குகள் அனைத்தும் பிறிதொரு தினத்திற்குத் திகதியிடப்பட்டன.

அதேநேரம் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், சாவகச்சேரி, பருத்தித்துறை, ஆகியநீதிமன்றங்களின்முன்பாக சட்டத்தரணிகள் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். நீதித்துறையின் சுதந்திரத்தைப் பறிக்காதே, நீதிபதிகளைஅச்சுறுத்தாதே என்று எழுதப்பட்ட பதாதைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம், கல்முனை நீதிமன்றம் ஆகியவற்றில் சட்டத்தரணிகள்பணிப்புறக்கணிப்பில்ஈடுபட்டதுடன் கவனவீர்ப்புப் போராட்டத்திலும்ஈடுபட்டனர். இனவாதத்தைத்தூண்டாதே, நீதித்துறை சுதந்திரத்தில் தலையிடாதே போன்ற வாசகங்களை அவர்கள் தாங்கியிருந்தனர்.

சரத் வீரசேகரவின் நாடாளுமன்ற உரைக்குத் தமது கண்டனத்தைத் தெரிவித்த சட்டத்ரணிகள், இது நீதித்துறையின் சுதந்திரத்தை அச்சுறுத்தும் செயல் என்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதுதொடரபில்மேலதிக நடவடிகைகைகளை இலங்கை சட்டத்தரணிகள்சங்கம்மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஜூலை 7 நாடாளுமன்றத்தில் உரையாற்றியநாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர "இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதைத் தமிழ் நீதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளபௌத்ததொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராகச் சில நீதிபதிகளும் செயற்படுகிறார்கள். குருந்தூர் மலையில் இருந்து எம்மை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. தொல்பொருள் தொடர்பில் ஆராயும் அதிகாரம் அவருக்கு இல்லை" என்று தெரிவித்திருந்தார்.

அது மட்டுமல்லாமல் பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணையவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரைக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்கிற முறைப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி கடந்த வாரம் அங்கு நேரில் சென்றிருந்தார். அப்போது அங்கு சென்றிருந்தனர் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர உள்ளிட்ட குழுவினரும்.

நீதிபதியின் விசாரணையின் இடையே குறுக்கிட்டு சரத் வீரசேகர கருத்துத் தெரிவிக்க முயன்றபோது, இங்கே நீதிமன்ற விசாரணை இடம் பெறுகின்றது உங்களுக்குக் கருத்துக்கூற அதிகாரம் இல்லை என்று தெரிவித்த நிதிபதி அவரையும் அவரது குழுவினரையும் அந்த இடத்திலிருந்து விலிகியிருக்கும்மாறு கட்டளையிட்டார். அதைத்தொடர்ந்தேபொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத்வீரசேகர நாடாளுமன்றத்தில் நீதிபதிக்கு எதிராக இனவாத ரீதியான கருத்துக்களை முன்வைத்தார்.

# முதல் கட்டமாக ரூ. ஒன்றரைக் கோடி இழப்பீடு செலுத்திய மைத்திரிபால

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவை முதல் கட்ட இழப்பீடாகச் செலுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்க தவறியதன் ஊடாக அடிப்படை மனித உரிமை மீறப்பட்டமையால் 10 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. குறித்த உத்தரவுக்கு அமைய, அவர் முதல் கட்டமாக ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவைச் செலுத்தியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணையில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள்ஜனாதிபதிஎன்றரீதியில்மாதாந்தம்97ஆயிரத்து 500 ரூபா ஓய்வூதியம் பெறுவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 54 ஆயிரத்து 285 ரூபாவை மாதாந்தம் பெறுவதாகவும் அந்தப் பிரேரணையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட 10 கோடி ரூபா இழப்பீட்டுத் தொகையில், ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவை உயிர்த்தஞாயிறுதினத்தாக்குதலில்பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்துக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எஞ்சியுள்ள தொகையை 2024 ஆம் ஆண்டு ஜூன் 30 முதல் 2033 ஆம் ஆண்டு ஜூன் 30 வரை 10 தவணைகளில் வருடாந்தம்85இலட்சம்ரூபாவீதம்செலுத்தஅனுமதிக்குமாறும் முன்னாள் ஜனாதிபதி தனது பிரேரணையில் கோரிக்கை விடுத்துள்ளார். (02)

# ஆசிரியர்களை உருவாக்க தனிப் பல்கலைக்கழகம்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

தேசியகல்வியியல்கல்லூரிகளுக்குப் பதில் ஆசிரியர்களை உருவாக்குவதற்கான தனிப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்றும் அமைச்சர்சுசில்பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மூனறு வருட கற்பித்தல் டிப்ளோமா பாடநெறிக்கு ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டார்கள், பதிலாக, நான்கு வருட பட்டத்திற்கான ஆசிரியர்களை உருவாக்குவதற்காக நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படுவார்கள் என்றார் அவர்.

வடமேல் மாகாணத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக அதிபர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச்சியில் நேற்று சிலாபம் சுதேச திரையரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த தேசிய கல்வி நிறுவகம் பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) ஒப்புதலுடன் கல்வி அமைச்சகத்தின் கீழ் வைக்கப்படும் என்றார். இங்குதொழிற்சங்கங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது, ஏனெனில் இந்தப்பல்கலைக்கழகங்கள் தேர்ச்சி பெறும் ஆசிரியர்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் – என்றார்.

## மக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“தமிழர்களின் இனப் பிரச்சனை விடயத்தில் 13 தீர்வல்ல. அதனையும் தாண்டிய, சமஸ்டி அடிப்படையிலானதீர்வேதமிழர்களின்அபிலாசையாகஇருக்கிறது. அதற்காகவே மக்கள் எமக்கு ஆணைவழங்கினர். அதனையே நாம் இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தவேண்டும். வெறுமனே 13ஐ மட்டும் கோரி நிற்க முடியாது. எமது கோரிக்கையை நாம் தெளிவாகவலியுறுத்துவோம்” என்றார் அவர்.

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளி வுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியின் போதுஇலங்கைக்கு, இந்தியா வழங்கிவரும்தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

அதேபோல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார். தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவையும் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோஹன் குவத்ரா சந்தித்துக் கலந்துரையாடினார். (02)

## இந்தியத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் தொடர்பில், தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் சம்பந்தன் எடுத்து விளக்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இரா.சம்பந்தனுடன் தமிழ்அரசுக்கட்சியின்யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இந்தச் சந்திப்பில் பங்குகொள்வார்.

## நீதித்துறையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தல்கள் அல்லது எந்தவொரு தலையீடும் இல்லாமல், நீதித்துறை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படவேண்டும்.

நீதித்துறையின் சுதந்திரத்தை மதிப்பதும், கடைப்பிடிப்பதும் ஆட்சியாளர்களினதும்எதிர்க்கட்சியினதும் கடமை, நீதித்துறை செயற்பாட்டில் எந்தவொரு தலையீடும் ஆபத்தான முன்னுதாரணமாக அமைகின்றது, அது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

இவ்வாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரத் வீரசேகரவின் ஜூலை 7 உரை தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்என்றுமூத்த தமிழ் சட்டத்தரணியான இரட்ணவேல் கடிதம் எழுதியிருந்தார். அதைத் தொடர்ந்து சங்கம் நேற்று இந்த அறிக்கையை வெளியிட்டது.kk

# மக்களுக்கு நலன்புரி ஆட்சி வேண்டாம் தொழில்முனைவோர் ஆட்சியே தேவை

## இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவிப்பு

எங்களுக்கு நலன்புரி அரசு தேவையில்லை. தொழில் முனைவோர் அரசொன்றையே நாம் உருவாக்க வேண்டும். ஒரு அபிவிருத்தி அடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான இலக்குகளை நலன்புரி அரசின் மூலம் அடைய முடியாது. அதற்கான வேலைத்திட்டத்தைத்தான் நாம் முறையாக முன்னெடுத்துச் செல்கிறோம் என சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதே சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1.2 மில்லியன் மக்களை உற்பத்திப் பொருளாதாரத்துடன் இணைத்து அவர்களை வலுவூட்டும் திட்டம் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். பாடசாலை செல்லும் வயது முதல் முதியோர் வரை பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டும் வேலைத்திட்டம் இதில் உள்ளடங்கும்.

அஸ்வெசுமபயன்களைப்பெறுவதற்கான மேன்முறையீட்டுக் கால அவகாசம் கடந்த 10ஆம் திகதி நிறைவடைந்துள்ளது. தகுதியுடையவர்களுக்கானகொடுப்பனவுகளை பெற்றுக்கொடுப்பதில்தாமதம்ஏற்படுவதினால் மேலும் அது நீடிக்கப்படவில்லை மேன்முறையீட்டு மனுக்களை சமர்ப்பிக்க முடியாதவர்களுக்கு ஓகஸ்ட் 1 முதல் மீண்டும் அந்த வாய்ப்பு வழங்கப்படும்.

சமூகத்தில் நீண்டகாலமாக இருந்து வந்த விமர்சனத்திற்கு விடையாக ‘அஸ்வெசும‘ திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். சமுர்த்தி கொடுப்பனவு வேலைத்திட்டத்திற்கு தகுதியானவர்களை தெரிவு செய்வதில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டது. குறிப்பாக சமுர்த்தி வேலைத் திட்டத்தில் சமூக வலுவூட்டல் முறைமை இல்லை என எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக சமூக வலுவூட்டல் முறைமையை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் சமூக நலன்புரி நன்மைகள் சபை ‘அஸ்வெசும‘ வேலைத் திட்டத்தைநடைமுறைப்படுத்தியது. ‘அஸ்வெசும‘ வேலைத்திட்டம் என்பது அரசியல் இல்லாத வெளிப்படையான செயல்முறையாகும். அந்த செயல்முறைக்குள் மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது. ஆண்டுதோறும் தகுதியுடையவர்களை உள்வாங்கும் மற்றும் தகுதியற்றவர்களை நீக்கும் செயல்முறையும் இதில் அடங்குகின்றது.

சுமார் 1.2 மில்லியன் மக்களை உற்பத்திப் பொருளாதாரத்துடன் இணைத்து அவர்களை வலுவூட்டும் பணியை ஜனாதிபதி எமது அமைச்சிடம் ஒப்படைத்தார். இது தொடர்பான திட்டம் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். இது 3 வருட திட்டமாகும், அந்த காலப்பகுதியில், இப்பிரிவினர் வலுவூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

இந்நாட்டில் உள்ள 18 இலட்சம் சமுர்த்திப் பயனாளர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் வயது முதிர்ந்தவர்கள். இளமையில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டாலும் 60 வயதை கடந்த பின்னரே சமுர்த்தி வேலைத்திட்டத்தில் அவர்கள் இணைந்தனர். அது குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளதுடன், சமூக பாதுகாப்பு சபையின் பங்களிப்புடன் ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதன்படி, 18 வயது முதல் 05 வருடங்கள் இதற்கு பங்களிப்பு செய்தவருக்கு 60 வயதுக்குப் பிறகு ஓய்வூதியம் கிடைக்கும். அந்த பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கவும் முடியும். பங்களிப்பு காலத்தைப் பொறுத்து ஓய்வூதியத்தை அதிகரிக்கலாம்.

மேலும், சமூகவலுவூட்டல்பணியில்கல்வி சீர்திருத்தங்கள் மிகவும் முக்கியமானவை. பயிற்சி பெற்ற தொழில்வல்லுநர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இந்த முழுத் திட்டத்திற்கும் எமக்கு சீனா, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சமுர்த்தி வங்கி கட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவு கிடைக்கின்றது. அதன்படி, இலங்கையில்எதிர்காலத்தில்சமுர்த்தி வங்கிகட்டமைப்பைபயன்படுத்தி, வறுமையை ஒழிப்பதற்காக அல்ல, பணக்காரர்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

இன்று சில அரசியல்வாதிகள் சமுர்த்தி வங்கி தொடர்பில் தவறான கருத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். ஆனால் அஸ்வெசும வேலைத்திட்டத்தின் ஊடாக சமுர்த்திவேலைத்திட்டம்மற்றும்சமுர்த்திவங்கி கட்டமைப்பு என்பன மிகவும் செயற்திறனுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

அஸ்வெசும செயல்முறையை சரியாக மேற்கொள்ள முறையான பொறிமுறை முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, அதன் மேல்முறையீட்டு காலம் கடந்த திங்கட்கிழமையுடன் நிறைவடைந்தது. அதைமேலும் நீடிப்பதால் தகுதியானவர்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய வழங்கப்பட்ட கால அவகாசம் போதுமானது என்று நாங்கள் நம்புகிறோம்.

மேலும், ஓகஸ்ட் 1 முதல், இம்முறை விண்ணப்பிக்க முடியாதவர்கள் அல்லது மேல்முறையீடு செய்ய முடியாதவர்கள் புதிதாக விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் இந்த நன்மைகளுக்கு தகுதி பெறுகின்றனர் மற்றும் சிலர் பல்வேறு காரணங்களால் நீக்கப்படலாம். மேலும், பாடசாலை செல்லும் வயது முதல் முதியோர் வரை பாதுகாத்து வலுவூட்டல் இந்த திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கம் 2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே தவிர வறுமையை ஒழிப்பதல்ல. அதற்குத் தேவையான பின்னணிதான் இது. எங்களுக்கு நலன்புரி அரசு தேவையில்லை. தொழில் முனைவோர் அரசொன்றையே நாம் உருவாக்க வேண்டும். ஒரு அபிவிருத்தி அடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான இலக்குகளைநலன்புரிஅரசின்மூலம்அடைய முடியாது. அதற்கான வேலைத்திட்டத்தைத் தான் நாம் முறையாக முன்னெடுத்துச் செல்கிறோம்- என்றார்.

# டிசெம்பரில் ஏ.எல். பரீட்சை

இந்த ஆண்டுக்கான கல்விப் பொது தராதர உயர் தரப் பரீட்சை (ஏ.எல்.) டிசெம்பர் மாதம் கிறிஸ்மஸ் தினத்திற்கு முன்னதாக நடத்தப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக தாமதமாகிப்போனவருடாந்தஉயர்தரப்பரீட்சை இந்தவருடம்ஓகஸ்ட்மாதம்நடத்தப்படும்என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பரீட்சைகளை நடாத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் உரையாற்றுகையில், 2023 உயர்தரப் பரீட்சைகள் இந்த ஆண்டு நத்தார் தினத்திற்கு முன்னதாக நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.

“இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த உயர் தரப் பரீட்சைகள் நவம்பர் 27 முதல் டிசெம்பர் 27 வரையான காலப்பகுதியில் நடத்தப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் 2023 தேர்வுகளை முடிக்க யோசனை. எவ்வாறாயினும், 2023ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைகள் அடுத்த வருடமே நடத்தப்படவேண்டும்” என்று அவர் கூறினார்

# பாலியல் துன்புறுத்தல் குற்றசாட்டில் கிறிஸ்தவ பாதிரியார் மீது விசாரணை

ஏறக்குறைய ஒரு வருடகாலமாக 15 வயது பாடசாலை மாணவியை அவ்வப்போது பாலியல் ரீதியாகத்துன்புறுத்திவந்தார் என்று குற்றச்சாட்டப்படும் கிறிஸ்தவ மதகுரு தொடர்பான விசாரணைகளைமாரவிலபொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தொடங்கியுள்ளது.

மாரவில தேவாலயம் ஒன்றின் மதகுரு மீதே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்படுவதைத் தவிர்க்கும்பாதிரியார்நாட்டைவிட்டுத் தப்பிச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுவது தொடர்பிலும் அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

குற்றச்சாட்டுத் தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த பொலிஸார், சந்தேகநபர் நாட்டை விட்டுதப்பிச்செல்ல முயற்சித்தால்அவரைவிமானநிலையத்தில்வைத்துக்கைதுசெய்வதற்கான உத்தரவைப் பெற்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டது.

ஆதாரங்களின்படி, குழந்தைக்கு நல்ல கல்வி தருவதாக வாக்குறுதியளித்து தேவாலயத்திற்கு அழைத்து வந்த சிறுமியை 2021 முதல் பல தடவைகள் பாலியல் ரீதியில் துன்புறுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். .பாதிக்கப்பட்ட குழந்தை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் 076 443 80 22

காலைக்கதிர் Kalaikkathir

# கட்சி அரசியலை கைவிடுங்கள் அரவிந்த டிசில்வா வலியுறுத்து



முதலீட்டாளர்களுக்கு உரிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக கட்சி பேதங்களை கை விடவேண்டும் என இலங்கை கிறிக்கெட் அணியின் முன்னாள் வீரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் முதலீட்டு சூழல் குறித்த இணையவழி கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முதலீட்டாளர்கள் வெளிப்படைத் தன்மை நம்பிக்கை மற்றும் நிலையான கொள்கை ஆகியவற்றை எதிர்பார்க்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் வெற்றி பெறவேண்டும் என்றால் ஒரேயொரு கொள்கை காணப்படவேண்டும் அதனை அனைத்து கட்சிகளும் அனைத்து மக்களும் ஆதரிக்கவேண்டும் என அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையிடம் முதலீட்டாளர்களுக்கான மிகப்பெரும் வாய்ப்புகள் உள்ளன எனினும் நாடு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட முயலும்போது கட்சி அரசியலால் அது பாதிக்கப்படுகின்றது.

நாடு வளர்ச்சி காண்பதை உறுதிசெய்வதற்காக நாங்கள் கட்சி அரசியலைக் கைவிட்டுவிட்டு ஓர் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிர்வாகம் செய்வதற்கு என நாடொன்று இருக்கவேண்டும் என்பதை அனைத்து கட்சிகளும் புரிந்துகொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்தியாவிலிருந்து பாடம் கற்கவேண்டும், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் தங்கள் தாய்நாட்டை வளப்படுத்துவதற்காக மீண்டும் திரும்பி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதத்தில் எந்த குறைப்பும் மேற்கொள்ளப்படமாட்டாது

## ஐக்கிய தேசிய கட்சி ஆஷு மாரசிங்க உறுதி

கடன் மறுசீரமைப்பின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதத்தில் எந்த குறைப்பும் மேற்கொள்ளப்படமாட்டாது. தற்போது வழங்கப்படும் 9 வீத வட்டி அவ்வாறே முன்னெடுக்கப்படும்.

அத்துடன் வங்கி கட்டமைப்பு வீழ்ச்சியடையும் என்ற எதிர்க்கட்சிகளின் பிரசாரம் பொய்யாகி உள்ளது என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டின் மொத்த கடன் தொகை 83 பில்லியன் டொலராகும். அதில் வெளிநாட்டு கடன் 41 பில்லியன் டொலர். உள்நாட்டு கடன் 42 பில்லியன் டொலராகும். வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பின் மூலம் 17 பில்லியன் டொலர்களைக் குறைத்துக்கொள்ளவும் 15 வருடங்களுக்கு கடன் தவணை நீடிப்பு வழங்குவதற்கும் அந்த நாடுகள் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளிநாட்டு விஜயங்களின்போது கடன் வழங்கிய நாடுகளுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடி இந்த இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டிருக்கிறார்.

அதேநேரம் உள்நாட்டு கடனில் 2 பில்லியன் டொலர்களை குறைத்துக்கொள்வதை உறுதிப்படுத்துமாறும் அந்த நாடுகள் கோரி இருக்கின்றன.

அதன் பிரகாரமே உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு அரசாங்கம் சென்றது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்போது வங்கி கட்டமைப்புக்கு பாரிய ஆபத்து ஏற்படும் என்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதம் குறைக்கப்படும் எனவும் எதிர்க்கட்சிகள் பொய் பிரசாரம் மேற்கொண்டு மக்களை ஏமாற்றி வந்தன. ஆனால் எதிர்க்கட்சிகள் தெரிவித்தமைபோல் எந்த விடயமும் இடம்பெறவில்லை.



அதேபோன்று அரச ஊழியர்கள் மற்றும் தனியார் துறை ஊழியர்களின் வைப்பு பணத்துக்கு பாதிப்பு ஏற்படும் என பிரசாரம் செய்தார்கள். ஆனால் பண வைப்பாளர்கள் யாரும் இவர்களின் பிரசாரத்தை நம்பவில்லை.

அவ்வாறு நம்பி இருந்தால் அவர்கள் தங்களின் வைப்பு பணத்தை வங்கிகளில் இருந்து பெற்றுக்கொண்டிருப்பார்கள். அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. அதனால் வங்கிகளில் வைப்பு பணத்தில் அரசாங்கம் ஒருபோதும் கை வைக்கப்போவதில்லை என்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறேன்.

அத்துடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதத்தை நூற்றுக்கு 9 வீதமாகக் குறைத்தது கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கமாகும். தற்போதுள்ள நூற்றுக்கு 9 வீத வட்டியை அரசாங்கம் குறைக்கப்போவதில்லை. 9 வீத வட்டியை தொடர்ந்து மேற்கொள்வோம். அதனால் எதிர்க்கட்சிகளின் பொய் பிரசாங்களுக்கு மக்கள் ஏமாந்துவிடக்கூடாது.

கடன் மறுசீரமைப்பு செய்ததன் மூலம் பொருளாதாரம் படிப்படியாக அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் செப்ரெம்பர் மாதமாகும்போது தற்போதுள்ள நெருக்கடி குறைவடைந்து வருமானம் அதிகரிக்கும்போது பணவைப்புகளுக்கான வட்டி வீதத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுப்போம். - என்றார். (05)

# நாடாளுமன்றத்தில் அனைவரும் பொறுப்புடன் செயற்படுகிறார்கள்

## கபீர் ஹசீம் பெருமிதம்

நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையானவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுகிறார்கள். பல சட்டங்களை நிறைவேற்றும் வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என பார்க்காமல் அனைவரும் ஒன்றிணைந்து அந்த சட்டங்களை நிறைவேற்றியுள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

மாவனெல்ல பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப் பிட்டவை வருமாறு -

போராட்டத்தின் பிரதிபலனாக நாடாளுமன்ற நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையானவர்கள் பொறுப்புணர்வுடன் செயல்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரிகிறது.

போராட்டத்தின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை பரீசிலித்து பல சட்டங்களை நிறைவேற்றும் வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என பார்க்காமல் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்.

அதுவும் ஒரு வெற்றியாகும். அதனை போராட்டத்தின் வெற்றியாகவே நான் பார்க்கிறேன். உண்மையில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு ஆட்சிமுறையில் மாற்றத்தையே போராட்டகாரர்கள் கோரினார்கள். - என்றார். (05)



## இலங்கையிடம் கேள்வி எழுப்புங்கள்

# ஐ.நா. மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகளிடம் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்து

தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கை மேலும் ஆழப்படுத்தக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கம் குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கையிடம் கேள்வி எழுப்பவேண்டுமென சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு மற்றும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியம் ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளன.

அதில் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்றும், அதனை முன்னிறுத்தி நம்பகத்தன்மை வாய்ந்ததும் அனைவரையும் உள்ளடக்கியதுமான நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் இலங்கை தொடர்பான உலகளாவிய காலாந்தர மீளாய்வின்போது நெதர்லாந்து, ஜேர்மனி, நியூஸிலாந்து, நோர்வே, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பரிந்துரைத்திருப்பது தொடர்பாக நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். இருப்பினும் இப்பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்த நிராகரிப்பு கடந்தகால மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுவதற்கான சாத்தியப்பாட்டையே காண்பிக்கின்றது.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட முன்னைய கட்டமைப்புக்களை ஒத்ததாகத் தற்போது ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யத் தவறியிருக்கின்றது.

பொறுப்புக்கூறல் தொடர்பில் மேலும் பல கேள்விகளைத் தோற்றுவிக்கக்கூடியவகையில் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள (முன்னைய யுத்த வலயத்தில்) மனிதப்புதைகுழி பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் பதற்றத்தை மேலோங்கச்செய்திருக்கும் பின்னணியிலேயே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது தொடர்பாகப் பேசப்படுகின்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் இன்னமும் வெளியிடப்படவில்லை. குறிப்பாக உலகளாவிய காலாந்தர மீளாய்வின்போது சில நாடுகளால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமையை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் 'குற்றவியல் விசாரணையை' வலியுறுத்தும் என்பதற்கான எவ்வித உத்தரவாதமும் இல்லை என்றே தோன்றுகிறது. குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான பதிலீடாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதென்பது சர்வதேச நியமங்களுக்கு முற்றிலும் முரணானதாகும் என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (05)

# பொருளாதார வீழ்ச்சிக்கான காரணத்தை திருடர்களுடன் இருந்தே தேட முடியுமா?

## தெரிவுக்குழுவிலிருந்து விஜித ஹேரத் விலக முடிவு



நாடு வங்குரோத்து அடைந்தமை தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளேன். திருடர்களுடனும், ஊழல்காரர்களுடனும் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணத்தைத் தேட முடியுமா? முடியாது.

இந்த குழுவால் இலங்கையின் வங்குரோத்துக்குக் காரணம் தேடி பயனில்லை. வீழ்ச்சிக்கு காரணமானவர்களே இதிலுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கம்பஹா நிட்டம்புவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

எமது இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த காரணத்தை தேடிப்பார்க்கும் குழுவில் நியமித்துள்ளவர்களை நோக்கும்போது அதில் யாரை நியமித்துள்ளார்கள்? சாகர காரியவசம், மஹிந்தானந்த அளுத்கமகே, பவித்ரா வன்னியராச்சி பொருளாதார வீழ்ச்சியை தேடும் குழுவின் உறுப்பினர்களாவர்.

அதில் பாரிய வேடிக்கை என்னவென்றால் அந்த குழுவின் தலைவர் சாகர காரியவசம். பஸிலுக்கு சார்பானவர். பஸிலை போன்றவர்.

பஸில் ராஜபக்ஷவே நாட்டின் பொருளாதார அமைச்சர், நிதி அமைச்சர், பொருளாதார வீழ்ச்சிக்கு பதில்கூறவேண்டிய பிரதான நபர். இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்றும் உள்ளது.

தற்போது அவரது அடிவருடி சாகர காரியவசத்தை இதன் தலைவராக நியமித்துள்ளனர். இந்த குழுவில் எனது பெயரை இணைத்து கொண்டது சோகமான விடயமாகும். இந்த திருடர்களுடன், இந்த ஊழல்காரர்களுடனும் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணத்தை தேட முடியுமா? முடியாது.

எனவே இந்த குழுவிலிருந்து இராஜினமா செய்கிறேன். அடுத்த வாரமே கடிதமொன்றை அனுப்பவுள்ளேன். இந்த குழுவால் இலங்கையின் வங்குரோத்து காரணம் தேடி பயனில்லை.

வீழ்ச்சிக்கு காரணமானவர்களே இதிலுள்ளனர். எனது கட்சி சார்பில் இந்த குழுவிலிருந்து நான் இராஜினமா செய்யவுள்ளேன். இப்படியானவர்கள் இருப்பார்கள் என நினைத்து பெயரை கொடுக்கவில்லை. - என்றார்.

14 பேரை உள்ளடக்கிய இந்த குழுவில் 9 பேர் பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களாவர். விஜித ஹேரத் உள்ளிட்ட 5 பேர் எதிர்க்கட்சி உறுப்பினர்களாவர்.

நாட்டின் நிதி வங்குரோத்துக்கு காரணத்தை ஆராய்ந்து அறிக்கையிடும் விசேட தெரிவுக்குழுவாக இந்த தெரிவுக்குழு காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (05)

# பாதுகாப்பு செயலர்போல் செயற்பட்டிருந்தால் கோட்டாபய இன்றும் பதவியில் இருந்திருப்பார்

## ரோஹித அபேகுணவர்தன கூறுகிறார்

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளரை போன்று சிறந்த முறையில் முறையாக செயற்பட்டிருந்தால் இன்றும் அவர் ஜனாதிபதி பதவியில் இருந்திருப்பார்.

எங்களுக்கும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் ஆட்சிக்கு கொண்டு வந்தோம்.

ஆகவே, அவரை நாங்கள் தொடர்ந்து நாட்டுக்காக பாதுகாப்போம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஹொரன பகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஜூலை 09 சம்பவம் பல விடயங்களை உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு பேரவாவியில் நீராடினோம், தாக்கப்பட்டோம், எமது வீடுகள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அரசியல் பயணத்தில் கடந்த ஆண்டு பல சவால்களை எதிர்க்கொண்டோம். சவால்களை வெற்றிக்கொண்டு மீண்டும் களமிறங்கியுள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரண்டு பிரதான பழைமை வாய்ந்த அரசியல் கட்சிகளுக்கு சவால் விடும் வகையில் ஸ்தாபிக்கப்பட்டது.

எவ்வித அரசியல் அதிகாரமும் இல்லாத நிலையில் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்றோம்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயராஜபக்ஷவை ஜனாதிபதிவேட்பாளராகக் களமிறக்கினோம். பாதுகாப்பு செயலாளர் என்ற ரீதியில் அவர் சிறந்த முறையில் செயற்பட்ட காரணத்தால் அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கி, பாரிய போராட்டத்துடன் ஜனாதிபதியாக்கினோம்.

கோட்டபயராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளர் பதவியில் சிறந்த முறையில் செயற்பட்டதை போன்று ஜனாதிபதியாக இருக்கும் போது செயற்பட்டிருந்தால் இன்றும் அவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருப்பார்.

எங்களுக்கும் இந்த நிலை தோற்றம் பெற்றிருக்காது. கடந்த ஜூலை மாதம் 09 ஆம் திகதி மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ கடினமான சூழ்நிலையில் கொழும்பு துறைமுகத்துக்கு சென்று அங்கிருந்து கப்பலேறி திருகோணமலை சென்று உயிர் தப்பினார்.

மே 09 சம்பவத்தைத் தொடர்ந்து பிரதமராக யாரை தெரிவு செய்யலாம் என கோட்டாபய ராஜபக்ஷ எம்மிடம் கோரி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா, டலஸ் அழகபெரும, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரில் ஒருவரை தெரிவு செய்யுமாறு வலியுறுத்தினார்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிக்க வேண்டும் என பொதுஜன பெரமுன தீர்மானித்ததைத் தொடர்ந்து அவரை பிரதமராக்குமாறு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்தினோம். அதனை தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். நாடாளுமன்றத்தின் ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாக்கினோம்.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாக்காத நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாத்து நாட்டை இயல் நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த தீர்மானங்களுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம். - என்றார். (05)

# பிரான்பற்றில் இளம் குடும்பஸ்தர் கத்தியால் குத்திப் படுகொலை

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரான்பற்று முருகன் கோவிலுக்கு அருகில் இடம்பெற்ற கத்திக்குத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

நள்ளிரவு 12.30 மணியளவில் உறவினர்கள் மூவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இருவர் இணைந்து ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். இதன்போது அவர்மீது கத்திக் குத்தும் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை காலை உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் ராஜ்குமார் (வயது 35) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து இருவரை இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வடக்கு கிழக்கு தாண்டியும் எதிர்ப்பு வலுப்படவேண்டும்

நீதித்துறையின் கண்ணியத்தைக் கேலிக்குள்ளாக்கி கேள்விக்குள்ளாக்கும் வகையில் பொது ஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையைக் கண்டித்து வடக்கு கிழக்கில் சட்டத்தரணிகள் தமது பலமான எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றார்கள். அதற்கு மேலதிகமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.

சரத் வீரசேகரவின் ஜூலை 7 நாடாளுமன்ற உரை, நாட்டின் நீதித்துறை மற்றும் சமூகக் கட்டமைப்பின் மீதான அடிப்படையற்ற, வெட்கக்கேடான தாக்குதல் என்று வன்மையாகக் கண்டித்துள்ளது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்.

நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ள விடயங்கள்குறித்துநாடாளுமன்றத்தில்உரையாற்றுவதன் மூலம் நாடாளுமன்ற சிறப்புரிமையைத் தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது என்பதையும்அந்தச்சங்கம்சுட்டிக்காட்டியுள்ளது.

”2023 ஜூலை 07 நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் ஆற்றிய வரை நாட்டின் நீதித்துறை மற்றும் சமூக கட்டமைப்பின் மீது நடத்தப்பட்ட அடிப்படையற்ற, வெட்கக்கேடான தாக்குதல்.. நீதித்துறைக்கு அழுத்தம் கொடுக்கும் சமீபத்திய இந்தப் போக்கு நீதித்துறையின் முக்கியமான அடிப்படைகளை அச்சுறுத்துவதுடன் குறைமதிப்பிற்கும் உட்படுத்துகின்றது.

ஒரு துடிப்பான ஜனநாயகம் நிலவுவதற்கு, வெளிப்புற அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் அல்லதுஎந்தவொருதலையீடும்இல்லாமல்,நீதித்துறை சுதந்திரமாகசெயல்படஅனுமதிக்கப்படவேண்டும்.

நீதித்துறையின் சுதந்திரத்தை மதிப்பதும், கடைப்பிடிப்பதும் ஆட்சியாளர்களினதும் எதிர்க்கட்சியினதும் கடமை, நீதித்துறை செயற்பாட்டில் எந்தவொரு தலையீடும் ஆபத்தான முன்னுதாரணமாக அமைகின்றது, அது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதாகும்” என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கை மேலும் கண்டிதுள்ளது.

சட்டத்தரணிகளின்இந்தஎதிர்ப்புமட்டும்வீரசேகர போன்றவர்களின் இனவாதக் கூச்சல்களைக் கட்டுப்படுத்தப் போதுமானது அல்ல. அத்துடன் தமிழ் நீதிவான் ஒருவருக்கு எதிராக சரத் வீரசேகர ஆற்றிய உரைக்காக வடக்கு கிழக்கில் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது என்பது அவரைப் போன்றவர்கள் தெற்கில் இன்னும் கதாநாயக பின்பத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமே தவிர அவரைக் கட்டுப்படுத்தப்போவதில்லை.

எனவே வடக்கு கிழக்கை தாண்டியும் பரந்துபட்ட எதிர்ப்பு தெற்கில் இருந்தும் எழுப்பப்படவேண்டியது கட்டாயம். இதுவரையில் தெற்கில் உள்ள மனித உரிமை அமைப்புக்களோ, பொது அமைப்புக்களோ சரத் வீரசேகரவின் உரையைக் கண்டித்து எதிர்ப்பை வெளியிடவில்லை. அத்தகைய எதிர்ப்பு வெளிப்படுத்தப்படவேண்டியது மிக அவசியம். அப்போதுதான் வீரசேகர போன்றவர்களை ஒரு கட்டுக்குள் கொண்டு வர முடியும். நாடும் அமைதியாக இருக்க முடியும்.



# கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்தும் அரசியல்

**ந.லோகதயாளன்**





வடக்கு கிழக்கில் தமிழர்களின் இனப் பிரச்சினை விடயத்திற்கு இந்தியா வைத்த தீர்வில் ஒன்றுதான் அரசமைப்பின்13ஆவதுதிருத்தச்சட்டம் இலங்கையில் உள்ளது. அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஒருபக்கம் இருக்க, அதிகாரப் பகிர்விற்கான ஒரு படியாகவே அது உருவாக்கப்பட்டது.

இப்படி உருவாக்கப்பட்ட மாகாண சபையில் இருந்து - இருப்பதில் இருந்து - அடுத்தவற்றைக் கோருவதா அல்லது தமிழர் விடயத்தில் தற்போதைய அரசியல் நிலைக்கேற்ற தீர்வைக் போருவதா அல்லது தமிழ் மக்களின் இறைமையைமதித்துதாயகம்,தேசியம், சுயநிர்ணயத்தின் அடிப்படையில் தீர்வைக் கோருவதா என்பதே தமிழ் அரசியல் கட்சிகள் இடையே இப்போதுள்ள முக்கிய பிரச்சினை.

இந்தியாவால் கொண்டு வரப்பட்டு சட்டப் புத்தகத்தில் எழுத்தில் உள்ள 13ஐ முழுமையாக நிறைவேற்றுங்கள் என ஒருதரப்புக் கோரும் நேரம் தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டியே தீர்வாக முடியும் அதனை நிறைவேற்றுங்கள் என இன்னுமோர் தரப்புக் கோரும். சமஷ்டியேதீர்வாகமுடியும்எனப்பாரதப் பிரதமரும் 13இற்கு அப்பால் தீர்வை வழங்குவோம்எனமகிந்தராஜபக்ஷவும் ஏற்கனவே கூறியிருப்பதனால், அதனை நிறைவேற்ற அழுத்தங்களை வழங்குங்கள் என்று மற்றொரு தரப்பு வலியுறுத்தும்.

இவ்வளவு காலமும் இந்த அரசியல் இலங்கைக்குள்ளேயே சுற்றிச் சுழன்றுவந்தது என்றால், இப்போது அது இந்தியா வரையும் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியிருக்கிறது. இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தையொட்டி இந்தக் கருத்தியல்களுடன் இதுவரை 3 கடிதங்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்படுவது உறுதியாகி இருக்கின்றது. அதில் முதலாவது கடிதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூவரிடம் கையளிக்கப்பட்டுமுள்ளது.

இனி சிவில் சமூகம் எனவும் வேறு பொது அமைப்புக்களின் பெயரிலும் மனித உரிமை அமைப்புக்கள் என்ற பெயரிலும் கடிதங்கள் சென்றாலும் ஆச்சரியப்படமுடியாது. மாறுபட்ட கோரிக்கைகளுடன் இந்தியப் பிரதமர் அலுவலகத்திற்குச்சென்றுகுவியக்கூடிய இந்தக் கடிதங்களை யாராவது அங்கு பார்ப்பார்களா, குறைந்தபட்சம் புதுடில்லியில் உள்ள சவுத் புளக் அதிகாரிகளாகவது படித்துப் பார்ப்பார்களா என்று தெரியாது. ஆனாலும் கட்சிகள் தங்கள் கடித அரசியலைத் திறம்பட முன்னெடுப்பதில் போட்டிபோடுகின்றன.

இந்தியாவுக்குக் கடிதம் எழுத்தும் பணி ஒருபுறத்தில் நடந்தால், இலங்கைக்குள், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்து என்ற முழுக்கத்தோடு இந்த அரசியல் தரப்புக்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இப்படி எல்லோருமே இந்தியா தீர்வைப் பெற்றுத் தரும் என்ற கணக்கில் கடிதங்கள் எழுதிக்கொண்டும் கருத்தரங்குகள் நடத்திக்கொண்டும் இருக்கையில், இலங்கை அரசைப் பகைத்துக்கொண்டு அல்லது அதனுடன் முட்டிமோதிக்கொண்டு ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுத் தரும் வல்லமை இந்தியாவுக்கு உண்மையிலேயே உண்டாஎன்பதுசிந்திக்கப்படவேண்டிய, ஆராயப்படவேண்டிய மிக முக்கியமான விடயம். இலங்கை அரசு பொருளாதாரத்தில் முழுமையாக ஆட்டம் கண்டுள்ள நிலையில், அதற்குப் பெருமளவில் கடன் வழங்கிய நாடுகளின் பட்டியலில் முதல் மூன்று இடங்களிற்குள் இந்தியா இருக்கிறது. அதனால் இந்தியா கூறுபவற்றை இலங்கை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது, அதனைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியா தமிழர்களுக்கு ஒரு தீர்வினைப் பெற்றுத்தரவேண்டும் என்பது தமிழர்களின் பிரதிநிதிகளின் கணக்காக உள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால் அது சரியானது போலவும் தோன்றும்.

ஆனால், இதற்கு எதிர்க் கணக்கும் ஒன்று உள்ளது. அதுவே இலங்கை அரச தரப்பின் கணக்காகவும் உள்ளது. அதாவது இலங்கைக்குக் கூடுதலாகக் கடன் வழங்கிய முக்கியமான 3 நாடுகளின் பட்டியலில் இந்தியா மட்டுமல்ல, அதன் எதிரியான சீனாவும் உள்ளது. இந்தியா நெருக்கிப் பிடித்தால் இலங்கை சீனாவின் பக்கம் அதிகம் சாயும். சீனாவின் பக்கம் இலங்கை இழுத்துச் செல்லப்படுவதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால்இந்தியாஇலங்கைக்கு உதவவேண்டியது கட்டாயம். அதனால் கொழும்பு கை நீட்டும்போதெல்லாம் இந்தியா அந்தக் கையை நிர்ப்பதயாராக இருக்குமே தவிர, கொழும்புக்கு அதீத அழுத்தத்தைக் கொடுக்காது என்பது அந்த மற்றொரு கணக்கு.

பூகோள அரசியல் போக்கு பற்றி தமிழர்கள் அதிகம் பேசினாலும், அதனை வளைத்துப்போடுவது குறித்து காலநேரம் பாராமல் ஆய்வு நடத்தினாலும், அதே பூகோள அரசியலை நன்கு கையாண்டு சீனா-இந்தியா-அமெரிக்கா ஆகியவற்றுக்கு இடையேயான முரண்பாட்டை-வல்லாதிக்கப் போட்டியை - தனக்குச் சாதமாக்கிக்கொள்வதில் சிங்கள அரசியல் தலைவர்கள் கைதேர்ந்தவர்கள். இதுவரையான காலத்திலும் அவர்கள் அதனை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய நிலையில் - பின்னணியில் - தமிழர் தீர்வில் இந்தியா அக்கறை செலுத்த வேண்டுமானால் ஈழத் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்?

### ஏதாவது வழி வகை இருக்கின்றதா?

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுங்கள் என்று கோருவதாலோ, சமஷ்டியை வழங்க வலிறுத்தும்படி கோருவதாலோ இந்தியா ஈழத் தமிழர்களுக்குத் திர்வைப் பெற்றுத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதேநேரம், இந்தியாவிற்கு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயத்தை தம்மோடு சேர்த்துக்கொள்வதில் ஈழத் தமிழர்கள் தவறுகிறார்கள்.

மலையகத்தில் உள்ள தமிழ் மக்களை இந்தியா இன்றும் தனது மக்களாகவே கருதுகின்றது. இதனால்அவர்களையும்உள்ளடக்கி அவர்களின் தலைவர்களையும் இணைத்து அங்கே உள்ள தேவைகளையும் சேர்த்து ஈழத் தமிழர் அரசியல் நகர முற்பட்டால் இரு பகுதித் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காண இந்தியத் தலையீட்டை ஏற்படுத்த வாய்ப்புக் கிடைக்கக்கூடும்.

ஏனெனில் 1983களில் ஈழத் தமிழர்களின் விடயங்களில் இந்தியா கரிசனை செலுத்தியபோது ஈழத்தில் 40 லட்சம் தமிழர்கள் இருந்தனர். இன்று 40 வருடம் கழித்து அந்த எண்ணிக்கை வெறும் 25 லட்சம்கூட இல்லை. அத்தகைய நிலையில் இந்தியாவின் பார்வையை ஈர்க்க வடக்கு கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களிற்கும் சேர்த்து நன்மை பயக்கும் அரசியலை முன் வைக்கும்போது பழைய நிலை உருவாகக்கூடும்.

> **இவ்வளவு காலமும் இந்த அரசியல் இலங்கைக் குள்ளேயே சுற்றிச் சுழன்று வந்தது என்றால், இப்போது அது இந்தியா வரையும் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியிருக்கிறது. இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தையொட்டி இந்தக் கருத்தியல்களுடன் இதுவரை 3 கடிதங்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்படுவது உறுதியாகி இருக்கின்றது.**

வடக்கு கிழக்கு அரசியல் வேறு மலையக அரசியல் வேறு இரண்டும் ஒன்றுபட்டுப் பயணிப்பதற்கு சாத்தியமில்லை என்று இப்போது எண்ணத் தேவையில்லை. காலம் மாறிவிட்டது. இந்தியாயை ஈழத் தமிழ் இனத்தின் எதிரியாகப் பார்த்த, இந்தியாவின் சொற்படிதான் மற்றைய தமிழ்த் தேசியக்கட்சிகள் எல்லாம் ஆடுகின்றன, அதனால்தான் 13ஐ தீர்வாகத் திணிக்க அவை துணைபோகின்றன என்றெல்லாம் வசைபாடிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே இன்று முதல் ஆளாக ஓடிப்போய் இந்தியப் பிரதமருக்கு கடிதம் கொடுக்குமளவிற்கு நிலைமை மாறியிருக்கும்போது, வடக்கு கிழக்கு மற்றும் மலையக அரசியல் இணைந்து போவது மட்டும் சாத்தியமற்றது என்று நிராகரிக்கத் தேவையில்லை.

இந்தியப் பிரதமருக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம் எழுதியிருப்பது, கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பதனையே எடுத்துக்காட்டுகின்றது. இதேபோல் கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்னும் நிலையை உருவாக்கியது போன்று கண்டிப்பாக கருசணை கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்த அரசியல் அல்லது இராஜதந்திர உத்திகளையும் பயன்படுத்துவது உகந்ததோ எனவும் ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள் சிந்திக்க வேண்டியது காலக் கட்டாயம்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மலையகத்தில் நாடகம் மேடையேற்ற முயன்றவர் மீது விசாரணை இராணுவம் தமிழர்களைச் சந்தேகத்துடன் பார்ப்பதன் வெளிப்பாடு

## மனித உரிமைகள் ஆர்வலர் அம்பிகா சற்குணநாதன் காட்டம்

மலையகத்தில் நாடகமொன்ற மேடையேற்றமுயன்றவருக்குஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது, இராணுவம் அனைத்துத் தமிழர்களையும் சந்தேகத்துடன் பார்ப்பதையே வெளிப்படுத்துகிறது எனத்தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், ஆழமாக வேரூன்றியுள்ள இராணுவ மயமாக்கலை இது புலப்படுத்துகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.



இதனை அவர் தனது ருவிட்டர் பதிவிலேயே குறிப்பிட்டுள்ளார்.

அந்தபதிவில்மேலும்இடம்பெறுபவை வருமாறு -

கருத்துச் சுதந்திரத்தையும் உடன்பட மறுப்பதையும் ஒடுக்குவதற்காக சட்டத்துக்கு விரோதமான முறையில் செயற்படும் இராணுவம், அனைத்து தமிழர்களையும்சந்தேகத்துடன்பார்ப்பதை மலையகத்தில் இடம்பெற்ற இந்த சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் இராணுவமயமாக்கல் என்பது ஆழமாக வேரூன்றியுள்ளது.

கொட்டியாகல தேயிலை தோட்டத்தில் ராசையாலோகநாதன்என்பவர்கடந்த 7ஆம் திகதி நாடக மொன்றை மேடையேற்றத் திட்டமிட்டிருந்தார்.

குறிப்பிட்ட தோட்ட முகாமையாளர்கள் பொலிஸாருக்கு வழங்குவதற்கென கடிதமொன்றை தருமாறு ஏற்பாட்டாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

6ஆம் திகதி லோகநாதன் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார். அங்கு அவரிடம் அடையாள அட்டை இலக்கம், நாடகத்தில் நடிப்பவர்களின் விவரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களை கேட்டுள்ளனர்.

அதற்கு லோகநாதன் ஏன் என கேள்வி எழுப்பியவேளை, பாதுகாப்பு வழங்குவதற்காக என பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், குறிப்பிட்ட நாடகம் தொடர்பில் இராணுவம் விசாரிப்பதாக ஏற்பாட்டாளர்களுக்குதகவல்கிடைத்துள்ளது. ஏற்பாட்டாளர்கள், 'இராணுவம் அச்சுறுத்தியதா' என தோட்ட நிர்வாகத்தினரிடம் கேட்டுள்ளனர். 'அச்சுறுத்தவில்லை;ஆனால், நாடகம் குறித்து விசாரித்தனர்' என தோட்ட நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து, 7ஆம் திகதி மௌசாகலை இராணுவ முகாமிலிருந்து சுரேஸ் என்ற அதிகாரி லோகநாதனை தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ளார். அவருக்கு லோகநாதனின் அடையாள அட்டை இலக்கம் தெரிந்துள்ளது.

முகநூலில் நாடகம் குறித்த விவரங்களை பார்த்ததால் மேலும் தகவல்களைப் பெற விரும்புவதாக அவர் லோகநாதனிடம் தெரிவித்துள்ளார்.

அப்போது மலையகத்தில் நாடகங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வது இராணுவத்தின் கடமையா என லோகநாதன் கேட்டுள்ளார்.

அதற்கு, அந்த இராணுவ அதிகாரி, நாடகத்தை நடத்துவதற்கு பொலிஸாரின் அனுமதி கிடைத்துள்ளதால் நாங்கள் எந்த பிரச்சினையும் தரப்போவதில்லை; எந்த பிரச்சினையும் வராது எனக் கூறியுள்ளார்.

இது குறித்து, இராணுவ பேச்சாளரிடம் கேட்டபோதுஅவர், 'இதனைஎன்னால்உறுதி செய்யமுடியாது; பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுங்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், மௌசாகலை இராணுவ முகாமை சேர்ந்த கேர்ணல் சிவா என்பவர் 'பல சம்பவங்கள், நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அவற்றுக்குபுலம்பெயர் அமைப்புகள் நிதி வழங்குகின்றன' எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, 'சமீபத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலையகத்துக்கு விஜயம் மேற்கொண்டார். அவ்வாறானவர்கள் விஜயம் மேற்கொண்டால் அவர்களின் பாதுகாப்புக்காக எங்களுக்கு அறிவிக்க வேண்டும்' என்ற அந்த அதிகாரி, விடுதலைப்புலிகளின் கொள்கை மலையகத்திலும் பரவவேண்டுமா என்றும் கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட அதிகாரி, தமிழ்கட்சிகள்மலையகத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றமை தொடர்பாகக்கரிசனைவெளியிட்டுள்ளதுடன், அங்கு இடம்பெறும் அனைத்து நிகழ்வுகள் குறித்துவிசாரணைகளைமேற்கொள்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.

'பொதுமக்களுக்கு குழப்பம் விளைவிக்காமல் நாங்கள் அதனை செய்வோம்' என்ற அந்த அதிகாரி, அந்த குழுவின் மத்தியில் புலனாய்வாளர்கள், இராணுவத்தினர் இருப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் செயற்பாடுகள் சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றன. கண்ணுக்குதெரியாதமற்றும்அறியப்படாத வழிகளில் அதிவேகமாக வளர்ந்த இராணுவம் சட்டத்தால் வழங்கப்படாத, ஜனநாயகத்துக்குவிரோதமானசட்டங்களை பயன்படுத்தலாம் என நினைக்கிறது. ஆனால் தென்னிலங்கையின் எந்தவொரு அரசியல் கட்சியும் இது குறித்து கேள்வி எழுப்பாது என அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். (05)

# சாட்சியாளர் உயிருக்கு உத்தரவாதம் இல்லை

## ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் உள்ள இழுபறி நிலை தொடர்பாக அரசமைப்பு பேரவை விசேட கவனம் செலுத்த வேண்டும்.



நீதிமன்றங்களுக்கு சென்று சாட்சியம் வழங்குபவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க முடியாது. என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நிறைவடைந்த ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் நாட்டில் 40 துப்பாக்கி சூட்டு பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி 23 பேர் உயிரிழந்ததுடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளார்கள். பகல் வேளையில் பொது இடங்களில் இவ்வாறு துப்பாக்கி சூட்டு பிரயோகம் நடத்தப்படுகிறது.

நீதிமன்றங்களுக்கு சென்று சாட்சியம் வழங்குபவர்களில்பெரும்பாலானோர்துப்பாக்கி பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமல் உள்ள நிலையில் எவ்வாறு மக்கள் நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை கொண்டு சாட்சியம் வழங்குவார்கள்.

பொதுமக்களின் உயிருக்க உத்தரவாதம் இல்லாத நிலையில் நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க முடியாது. பதவி நிலையில் இருந்து ஓய்வுப்பெற்ற சி.டி.விக்கிரமரத்னவுக்கு பதவி காலம் நீடிக்கப்படுகிறதே தவிர புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவில்லை.

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் உள்ள இழுபறி நிலை தொடர்பில் அரசமைப்பு பேரவை விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை எதிர்க்கட்சிகள் சார்பில் வலியுறுத்தவுள்ளோம். - என்றார். (05)

# புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தகுதியானவருக்கே பதவி கிட்டும்

## ஆஷு மாரசிங்க உத்தரவாதம்

பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு பலவரது பெயர்கள் இருப்பதால் அவர்களில் மிகவும் தகுதியானவர் யார் என தேடிப்பார்க்க வேண்டி இருப்பதாலே புதிய பொலிஸ்மாஅதிபர்நியமனம் காலதாமதமாகி இருக்கிறது.



என்றாலும் தற்பாதுள்ள பொலிஸ்மா அதிபருக்கு நீடிக்கப்பட்டிருக்கும் பதவி காலம் முடிவடைவதற்குள் புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை ஜனாதிபதி பரிந்துரை செய்வார் என ஜனாதிபதியின்நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான ஆலாசேகர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்துக்கு அமைய புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரின் பெயரை அரசமைப்புபேரவைக்குஜனாதிபதி பரிந்துரைசெய்யவேண்டும்.

தற்போதுள்ள பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம்முடிவடைந்த பின்னர் புதிய பொலிஸ்மா அதிபருக்கான பலவரது பெயர்கள்பட்டியலில் இருக்கிறன.

அதனால் அவர்களில் தகுதியானவர்யார்என்பதை அலசி ஆராய்ந்தே ஜனாதிபதி பரிந்துரைசெய்யவேண்டி இருக்கிறது. அதற்கு சில காலம் தேவைப்படுகிறது. அதனால்தான் புதிய பொலிஸ்மா அதிபர் ஒருரை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அத்துடன்பதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு தகுதியானவர்களின் பெயர் பட்டியலில் இருக்கும் ஒருசிலர் தொடர்பில், அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக சிலர் ஜனாதிபதிக்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கிறனர்.

அவர்களை நியமிக்க வேண்டாம் எனவும் பகிரங்கமாக தெரிவித்திருக்கின்றனர். அதனால் இதுபோன்ற முறைப்பாடுகள் கிடைக்கும்போது அவை தொடர்பாகவும் ஆராய்ந்து பாரக்கவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு இருக்கிறது.

அதனால் புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதற்காக ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார். அதுவரைக்குமே தற்போதுள்ள பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலத்தை மேலும் 3 மாதத்துக்கு நீடிப்ப தற்குஜனாதிபதிதீர்மானித்துள்ளார். - என்றார். (05)

# புத்தளம் – அநுராதபுரம் வீதியில் யானைகள் நடமாட்டம் அதிகரிப்பு

புத்தளம் அநுராதபுரம் வீதியின் 6 ஆம் கட்டைப் பகுதியில் சுமார் 20 இற்கும் அதிகமான யானைகள் ஞாயிற்றுக்கிழமை மாலை நின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வழியால் செல்லும் மக்கள் வாகனங்களை நிறுத்தி அரிய வகைக் காட்சியை கண்டுகளித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

குறித்த யானைகள் இரவு நேரத்தில் வீதியைக் கடந்து கிராமங்களுக்குள் செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், குறித்த பகுதியிலுள்ள மக்கள் இரவு வேளைகளில்வெளியில்செல்வதற்கு மிகவும் அச்சத்திற்கு மத்தியில் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் இதன்போது தெரிவிக்கின்றனர். (05)

# வென்னப்புவ தந்தையும் மகனும் இத்தாலியில் ஆற்றில் மூழ்கி சாவு

இத்தாலியில் நீரில் மூழ்கி இரண்டு இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர்.

வென்னப்புவ பகுதியில் வசித்து வந்த ஒருவரும் அவரது மகனுமே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் தங்களது உறவினர்களுடன் இத்தாலியின் மிலன் அருகே உள்ள ஆற்றில் குளிக்கச் சென்றுள்ளனர்.

இதன்போது தனது 25 வயது மகன் நீரில் மூழ்குவதை பார்த்த 60 வயது தந்தை, மகனை காப்பாற்றுவதற்காக ஆற்றில் குதித்துள்ளார். எனினும், இருவரும் நீரோட்டத்தில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, அங்கு சென்ற அந்நாட்டு பாதுகாப்புப் படையினரால் இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டன. (05)

# 15 நாணய மாற்று நிறுவனங்களின் உரிமங்களை புதுப்பிப்பதில்லை என மத்திய வங்கி தீர்மானம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 15 நாணய மாற்று நிறுவனங்களின் உரிமங்களைபுதுப்பிப்பதில்லைஎனத் தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் 22.02.2023 அன்று சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குஅறிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கானபணப்பரிமாற்ற உரிமங்களின்நிபந்தனைக்கு இணங்காததால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகமத்தியவங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த நிறுவனங்கள் இனி பணப் பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவதில்லை,

மேலும் அந்த நிறுவனங்களுடன் வெளிநாட்டு நாணயங்களை வாங்குவது, விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் எண் அந்நியச் செலாவணிச் சட்டத்தின் விதிகளை மீறுவதாகக் கருதப்படுகிறது என அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# டிக்டொக் காதல் மனைவியை விபச்சாரத்தில் ஈடுபடுத்த முயற்சித்ததால் அவர் தற்கொலை

## யாழ். சுன்னாகம் யுவதிக்கு ஏற்பட்ட அவலம்

டிக்டொக் மூலம் காதலித்த மனைவியை விபச்சாரத்தில் தள்ள முற்பட்டதால் மனைவி தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த பாடசாலைமாணவிஒருவர் கடந்த வருடம் டிக்டொக் ஊடாக சீதுவை பகுதியைச் சேர்ந்த இளைஞனுடன் காதல் வயப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பாடசாலை கல்வியை கைவிட்டு, வீட்டை விட்டு வெளியேறி சீதுவைக்குச் சென்று காதலனை திருமணம்செய்துள்ளார்குறித்த மாணவி.

திருமணமாகி சில வாரங்களில், சீதுவை இளைஞன் தனது காதல் மனைவியைபணத்துக்காக விபச்சாரத்தில் ஈடுபடுத்த முயன்றுள்ளார்.

அதனையடுத்துகுறித்த யுவதி அங்கிருந்து தப்பித்து யாழ்ப்பாணம் திரும்பி பெற்றோருடன் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில், சீதுவை இளைஞன் குறித்த யுவதியை தொடர்பு கொண்டு தன்னிடம் வருமாறும் இல்லையெனில், காதலித்த நேரங்கள் மற்றும் திருமணமான பின்னர் இருவரும் மிக நெருக்கமாக எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் மற்றும் காணொலிகளை சமூக ஊடகங்களில் வெளியிடுவேன் என மிரட்டியுள்ளார்.

இதனால் விரக்தியடைந்த யுவதி தவறான முடிவெடுத்து, தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில், உறவினர்களால் காப்பாற்றப்பட்டு , யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (05)

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மின்கட்டணத் திருத்தங்களை வரவேற்கின்றோம்

## கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் தெரிவிப்பு

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் ஜூலை - டிசெம்பர் காலப் பகுதிக்கான மின்சாரக்கட்டணத்தில் அண்மையில் செய்யப்பட்ட திருத்தங்களை கூட்டு ஆடைகள் சங்கங்களின்மன்றம்வரவேற்றுள்ளது.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மற்றும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டணத் திருத்தங்கள் தொழிற்துறை சமர்ப்பிப்புகள் போன்ற விடயங்களைக் கவனத்தில் கொள்ளாமல், நெரிசல் இல்லாத நேரங்களில் தொழிற்துறை மின்சாரக்கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

இதனால் செயற்பாட்டுச் செலவுகள் முக்கியமாக அதிகரித்ததால், நெரிசல் இல்லாத நேரங்களில் வேலையின்மை பிரச்சினைக்கான அவதானம் காணப்பட்டது.

மேலும் இந்தக் காலகட்டத்தில் ஆடைத்தொழிலின்போட்டி மற்றும் ஒட்டுமொத்த நிலைத்தன்மைக்கும் பிரச்சினையாக அமைந்தது. 12 மாதங்களில் 400 வீத மின்கட்டண விகிதங்கள் அதிகரிக்கப்பட்டன.

புதிய திருத்தங்கள் ஒட்டு மொத்த தொழில்துறை மின் கட்டண விகிதங்களை சுமார் 9 வீதம் குறைத்துள்ளன. இந்த நடவடிக்கையைப் பாராட்டினாலும், உலகச்சந்தையின் பாதகமான நிலைமைகளின் காரணமாக, ஆடைத்துறையின் ஏற்றுமதி செயல்திறன் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அதிகதொழில்துறை மின்கட்டணக் குறைப்புகளை மின்சார ஒழுங்குமுறை நிறுவனம் பரிசீலிக்கும் என்று தொழில்துறையினர் நம்புகின்றனர்.

மே 2023 இல் ஆடை மற்றும் துணி ஏற்றுமதி வருமானம் 14.55 வீதம் குறைந்துள்ளதால், தொழில்துறை மின்சாரக்கட்டண விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் தொழிற்துறையினர் மேலும் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும் அனுகூலங்களை அடைய முடியும். கடந்த ஆண்டு முதல் மீண்டும் மீண்டும் மின்கட்டண உயர்வுகளுக்கு இடையே பாதிக்கப்பட்ட பகுதியில் தொழில் துறையின் போட்டித்தன்மையை மீட்டெடுப்பதில் இதுவும் ஒருமுக்கிய அங்கமாகும். 2030 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் 70 வீத எரிசக்தியை புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களில் இருந்து உற்பத்தி செய்யவேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கத்தை பூர்த்திசெய்ய வேண்டும் என அந்த சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (05)

# அம்பாறை கனகர் கிராமத்தில் மீள்குடியேற்றம் ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை!





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் பேரில், 1987 ஆம் ஆண்டு உச்ச யுத்தத்தின் போது இராணுவத்தினரால் அம்பாறை கனகர் கிராமத்தில் உள்ள 500 ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட, போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான புனர்வாழ்வு வேலைத் திட்டத்தை அமைத்து கொடுப்பதற்கான நடவடிக்கை நேற்று (செவ்வாய்க்கிழமை) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் காணியில் அம்மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான சுத்திகரிப்பு வேலைத்திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசனின் கோரிக்கையின் பேரில் உள்ளூராட்சி அமைப்புகள் ஆதரவுடன் நடைபெற்றது. (05)




## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கல் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குக

### நீதிமன்று உத்தரவு

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு எவையும் வழங்கப்படவில்லை என்று சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியதையடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும், இது தொடர்பிலான மனுக்களை எதிர்வரும் ஒக்ரோபர் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

உச்ச நீதிமன்ற நீதியரசர் மூர்து பெர்னாண்டோ தலைமையிலான நான்கு நீதிபதிகள் அடங்கிய குழு முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (05)


## இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழக முன்னாள் தலைவருக்கு மாரடைப்பு

### இலங்கையில் இருந்தபோது

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி கழகத்தின் -இஸ்ரோ- முன்னாள் தலைவர் இலங்கையில் தங்கியிருந்தவேளை மாரடைப்பால் பாதிக்கப்பட்டுள்ளார்.



அவரைசிகிச்சைக்காக பெங்களூர்கொண்டுசெல்வதற்கானநடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# தலைமைத்துவ பயிற்சி வழங்கலின்போது ஏரியில் வீழ்ந்து 28 வயது இளைஞர் இறப்பு

ஊவா - குடாஓயா பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற தலைமைத்துவ பயிற்சியின்போது ஏற்பட்ட விபத்தில் சிக்கி 28 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தியத்தலாவைபிரதேசத்தில்வசிக்கும் இவர், தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றின் பொறியி-யலாளர் பிரிவில் பணிபுரிபவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை6ஆம்திகதி ஊவா-குடாஓயா கொமாண்டோ பயிற்சி நிலையத்தில்நடைபெற்றதலைமைத்துவ நிகழ்ச்சியில் உயிரிழந்தவர் உட்பட நிறுவனத்தின்ஊழியர்கள்குழுவொன்று பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போதே சேறும் சகதியுமான ஏரி ஒன்றில் வீழ்ந்துஇவர் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம்தொடர்பில்இலங்கை இராணுவம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (05)

# கவனயீனமான விபத்துக்களை தடுக்க முறையான வேலைத்திட்டம் அவசியம்

## மனித உரிமை மீறல் அமைப்பின் கிழக்கு பணிப்பாளர் கருத்து

மன்னம்பிட்டி பஸ் விபத்தில் இதுவரையான தகவல்களின் படி 11 பேர் மரணித்து, 40 பேரளவில் காயமடைந்துள்ளனர் என அறியக் கூடியதாக உள்ளது.

இது போன்ற கோர விபத்துக்கள் இனிமேலும் இடம்பெறாமல்போக்குவரத்து அமைச்சும், மாகாண வீதிப் பயணிகள் அதிகார சபையும், பொலிஸ் திணைக்களமும் இதற்கான சில வேலை திட்டங்களை முறையாக செய்ய வேண்டுமென அடிப்படை மனித உரிமைமீறல்அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.ஏ.நளீர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

உண்மையில்இந்ததுயர் நிறைந்த சம்பவம் என்னையும்மிகவேதனைக்குட்படுத்தி உள்ளது. மன்னம்பிட்டி பஸ் விபத்தில் மரணமடைந்தவர்களின்குடும்பங்களுக்குஎனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் விபத்தில் படுகாயமடைந்தவர்கள் விரைவில் நலன்பெறபிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இப்படியான கவனவீனமான விபத்துக்கள் சாதாரணமக்களின்உயிருடன் விளை யாடுவதாக அமைந்துள்ளது.

இந்த பொடுபோக்கான செயலுக்கு பொறுப்பேற்கவேண்டியது யார்? விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு பொடுபோக்கான செய-லுக்கு துணைபோன அதிகாரிகள் கூறப்போகும் நியாயம் என்ன? குறித்த பஸ் தொடர்பில்தொடர்ந்தும்விமர்சனம் இருந்த சூழ்நிலையில் அதனை கவனத்தில் கொள்ளாமல் விட்டது ஏன்? என கேள்வியெழுப்பியுள்ளார். (05)

# கவனயீனம் உயிர்களைக் காவு கொண்டுள்ளது: உறவுகளின் மறைவு மிகுந்த வேதனையளிப்பு!

## ஹரீஸ் எம்.பி இரங்கல்



பொடுபோக்குகள், கவனவீனம் காரணமாக அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து கொண்டே போகின்றன. அதன்தொடர்ச்சியாக ஞாயிறு இரவுகதுறுவெலையிலிருந்து பயணித்த தனியார் பஸ், மன்னம்பிட்டி, கொட்டலிய பாலத்தில் விபத்துக்குள்ளாகி ஆற்றில் விழுந்ததால் 10 இற்கும் அதிகமானவர்கள் மரணித்த விடயம் எல்லோருக்கும்கவலையைஏற்படுத்தி உள்ளது என ஸ்ரீ ல.மு.கா பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அறிக்கையொன்றினூடக தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

மேற்படி பகுதியில் தொடர்ந்தும் விபத்துக்கள் நடைபெறுவதை அறிந்தும் பொடுபோக்காக சாரதிகள் தொடர்ந்தும்வாகனங்களை கண்மூடித்தனமாக செலுத்துவது உயிர்களுடன்விளையாடுவதாகவே அமைந்துவிடுகிறது. இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், குடும்பஸ்தர்கள், பெண்கள் என குறித்தவிபத்தில்காலமான அத்தனை உயிர்களும் பெறுமதியானது. இவர்களின் இழப்புஅவர்களின்குடும்பத்தினது இழப்பு மட்டுமல்ல இந்த நாட்டின் இழப்பாக அமைந்துள்ளது.

ஆசனங்களுக்கு மேலதிகமான பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனங்களைச் செலுத்திச் செல்லும்சாரதிகள் அவர்களது வாகனத்தில் பயணிக்கும் ஒவ்வொரு உயிரும் பெறுமதியானது என்பதை அறிந்துகொண்டு வாகனத்தை செலுத்த வேண்டும். இப்படியானவிபத்துக்களுக்கு வாகன உரிமையாளர்கள், சாரதிகள் மட்டுமன்றி பாராமுகமாகஇருந்தஅதிகாரிகளும் பொறுப்புக் கூற வேண்டும்.

இந்த விபத்தில் காலமான அத்தனை எனது உறவுகளுக்கும் எல்லாம் வல்ல இறைவன் நல்ல நிலையை வழங்க பிரார்த்திப்பதோடு, காயமடைந்தவர்கள் விரைவில் குணமாகி வீடு திரும்பவும் பிரார்த்திக்கிறேன். விபத்தில் காலமானவர்களின் குடும்பத்தினருக்கும்உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (05)

# பலர் எதிர்பார்த்ததன்படி பொருளாதார நெருக்கடி இலங்கையின் முதுகெலும்பை முறிக்காதது ஏன்?

## சொல்ஹெய்ம் விளக்கம்



இலங்கை மக்களுக்கே உரிய மிக கடினமான நெருக்கடிகளில் இருந்து மீளும் திறன் காரணமாக கடந்த வருடத்தின் பொருளாதார நெருக்கடி இலங்கை யின் முதுகெலும்பை முறிக்கவில்லை என நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இணையவழி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் அசாதாரண பொருளாதார நெருக்கடிஏற்பட்டவேளை அது இலங்கை மக்களின் முது கெலும்பை முறிக்கும் என பலர் நினைத்தனர் என எரிக்சொல்ஹெய்ம் தெரி வித்துள்ளார்.

எனினும் இலங்கை மக்களுக்கே உரிய மிகவும் நெருக்கடியிலிருந்து மீளும் திறன் காரணமாக இது சாத்தியமாகவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அதன்காரணமாக இலங்கையால் அந்த நெருக்கடியிலிருந்து மீண்டு முன்னோக்கி செல்வதுகுறித்துசிந்திக்கமுடிகின்றதுஎனவும் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

தற்போதையசூழ்நிலைஉருவாகுவதற்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவினதும் ஏனையவர்களினதும் தலைமைத்துவமே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அற்புதமானதீவுக்கானமகத்தான வாய்ப்புகளை ஆராயும் தருணம் தற் போது வந்துள்ளது. மீள் புதுப்பிக்கத்தக்க சக்திதுறை மற்றும்சுற்றுலாத்துறைஆகியனஅதிகதிறன் கொண்ட துறைகளாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# அதிகாரத்தை வைத்திருந்தபோது ஒன்றும் செய்யாத ரவூப் ஹக்கீம் இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கிறார்

## ஐக்கிய காங்கிரஸ் சாட்டை

கதுருவெல வாகன விபத்துக்கு துக்கம்தெரிவித்துள்ளஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்படிபாலத்தைதிருத்துவதில்அரசாங்கம் பொடுபோக்காய் இருந்துள்ளதாக குறை கூறியுள்ள நிலையில் கிழக்கு மக்களை இணைக்கும் இப்பாலத்தை மைத்திரியின் அமைச்சரவையில் ஹக்கீம் குந்திக் கொண்டிருக்கும் போது திருத்த முயற்சிக்காமல் இருந்து விட்டு இப்போது நீலிக்கண்ணீர்வடிக்கின்றார்எனஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தப்பாலம்என்பது இன்று நேற்று போட்டபாலம்அல்ல. பலதசாப்தங்களாக இப்படித்தான்உள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்தையும் இணைக்கும் பாலங்கள் பிரித்தானியரின் ஆட்சியில் போடப்பட்டு அண்மை வரை அவை ரயிலும் வாகனங்களும் செல்லும் பாலங்களாகவே இருந்து வந்தன. இதன் காரணமாக வாகன பயணிகள் பல காத்திருப்புக்களை சந்தித்தனர்.

2005ஆம்ஆண்டுஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவே இப்பாலங்களின் பிரதான, நீண்ட பாலங்களை தனி வீதிகளாகப் புனரமைத்து வாகனங்கள் மட்டும்செல்லும்பாலங்களாகமாற்றியமைத்தார். இதில் மன்னம்பிட்டி, ஓட்டமாவடி பாலங்களும் அடங்கும். மேற்படி விபத்து நடந்த சிறிய பாலம் அகலமாக்கப்படவில்லை. பொலன்னறுவையை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கூட இதை திருத்த அக்கறை கொள்ளவில்லை.

ஆனாலும் கிழக்கு மாகாண மக்களின் அதிக பட்ச வாக்குப்பெற்ற கட்சியின் தலைவராகவும் அந்த வாக்குகள் காரணமா கவும் மைத்திரியின் அமைச்சரவையில் பதவியை பெற்றிருந்த ரவூப் ஹக்கீமாவது இந்தப்பாலத்தை திருத்தும்படி மைத்திரிக்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

நல்லாட்சியின் போது இப்பாலத்தில் மருதமுனையை சேர்ந்த ஒரு வைத்தியரின் வாகனம் விழுந்து அவரின் குடும்பம் மரணித்த நிலையிலும் மருதமுனை மக் களின் அதிக வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் இந்தப் பாலத்தை திருத்த எந்த



வொரு அழுத்தத்தையும் அரசுக்கு கொடுக்காமல் நாடாளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் தூங்கிவிட்டு இப்போது திடீரென முழித்துக்கொண்டு அரசாங்கத்தை குறை கூறுகிறார்.

ஆகவே இந்த விபத்துக்கான முழு பொறுப்பையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் அவரது அமைச்சில் குந்திக்கொண்டிருந்த ரவூப் ஹக்கீமுமே பொறுப்பேற்க வேண்டும் என்பதை ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெளிவாக சொல்லிக்கொள்கிறது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2023இல் வெளியிடப்பெற்றது.